# மோடி சுட்ட வடைகள்.. ( எல்லாமே ஊசிப்போச்சு ) 6

வாயில் வடை சுடுவது என்று சொல்வார்களே... அதற்கு 100 விழுக்காடு பொருத்தமானவர் ஒருவர் உண்டென்றால் அது மோடிதான். அவர் ரயில் நிலையத்தில் தேநீர் விற்றதாகச் சொன்னதே, அவர் வாயில் சுட்ட வடைதான் என்பதை தேசம் பின்னர் புரிந்து கொண்டது.

2014 ல் அவர் பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்தப்பட்டதில் தொடங்கி அவர் பிரதமராக இந்தியாவை ஆண்ட இந்த 10 ஆண்டுகளில் மோடி சுட்ட ஊசிப் போன வடைகளை மக்கள் மன்றத்தில் பந்தி வைப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

‘குஜராத்தை வளர்ச்சி அடைந்த மாநிலமாக மாற்றிவிட்டார் மோடி’ என்று விலை போன ஊடகங்களும், வலதுசாரி அரசியலை நிலைநிறுத்தவிரும்பிய அரசியல் தரகர்களும் தொடர்ந்து மக்கள் மன்றத்தில் ஒரு கருத்துருவாக்கத்தை உருவாக்கினர்.

**ஆனால் உண்மை அதுவா ? கடந்த சில நாட்களுக்கு முன் வெளியான செய்தி ஒன்றைப் பார்த்தோம். குஜராத்தில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த 1995 ஆம் ஆண்டிற்குப் பிறகு ஒரே ஒரு அரசு மருத்துவக் கல்லூரி கூட அம்மாநிலத்தில் கட்டப்படவில்லை.**

**2001-ல் இருந்து 2014 வரை மோடி அம்மாநிலத்தின் முதலமைச்சராக இருந்ததை நாம் இங்கே குறிப்பிட வேண்டும். தான் ஆட்சி செய்த குஜராத்தில் ஒரே ஒரு மருத்துக்கல்லூரியைக் கூட கொண்டு வராத மோடிதான் இந்தியா முழுவதும் தரமான மருத்துவத்தைத் தருவேன் என்று வாயில் வடை சுட்ட வல்லுநர்.**



குஜராத்தின் வறுமையை பிரதிபலிக்கும் புகைப்படம்

தான் பிரதமரானால் ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை வாய்ப்பு உருவாக்கப்படும் என்று மோடி சுட்ட வடையின் இன்றைய நிலை என்ன தெரியுமா ? பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளை விடவும் இந்தியாவில் வேலையின்மை விகிதம் பன்மடங்கு அதிகரித்துள்ளது.

**உங்களுக்கு நினைவிருக்கிறதா ? அமெரிக்கர்கள் இந்தியாவில் வேலைக்காக் காத்திருக்கும் நிலை உருவாகும் என்று மோடியின் ஆதரவாளர்கள் 2014 ல் சொன்னபோது, மெய்சிலிர்த்துப் போனவர்கள் பலர். அவர்கள் எல்லாம் இன்று கூனிக் குறுகிப் போகும் படி சமீபத்தில் ஒரு நிகழ்வு நடைபெற்றது..**

**இஸ்ரேல் - பாலஸ்தீன போர் தீவிரமாக நடைபெற்று வரும் நிலையில், சமீபத்தில் உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான் போன்ற பா.ஜ.க. ஆளும் மாநிலங்களைச் சேர்ந்த இளைஞர்கள் கட்டுமானப் பணிக்காக இஸ்ரேலுக்கு வேலைக்குச் செல்ல நீண்ட வரிசையில் காத்திருந்த காட்சியை இந்தியா கண்டது.**

**அவர்களிடம் போர் நடைபெறும் சூழலில் அங்கே வேலைக்குச் செல்வதன் காரணம் என்ன என்ற கேள்வி எழுப்பப்பட்ட போது, “பட்டினியால் இங்கே சாவதை விட அங்கே வேலைக்குச் செல்வதால் உயிர் போனாலும் பரவாயில்லை” என்பதாக அந்த இளைஞர்கள் சொன்ன பதில்களை சமூக வலைத்தளங்களில் கண்டபோது மோடி இந்தியாவை எங்கு கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார் என்று நினைத்துப் பார்க்கவே அச்சமாக இருந்தது.**



இஸ்ரேலுக்கு வேலைக்கு செல்வதற்காக வரிசையில் காத்திருக்கும் வடஇந்தியர்கள்

மோடியின் ஆட்சியில் இந்தியாவில் வேலை கேட்டு அமெரிக்கர்கள் வரிசையில் நிற்பார்கள் என்று சொன்ன மோடி ஆதரவாளர்கள் சுட்ட வடை ஊசிப் போய் துர்நாற்றம் வீசுகிறது. மோடியின் தவறான பொருளாதாரக் கொள்கைகளால், அடிப்படைவாத அரசியலால் வேலைவாய்ப்பின்மை அதிகரித்தது மட்டுமல்ல, சிறு , குறு, நடுத்தர தொழில்களும் முற்றிலும் முடங்கிப் போயின.




தமிழ்க் கேள்வி
தி.செந்தில்வேல்
மூத்த ஊடகவியலாளர்


**மேக் இன் இந்தியா திட்டம்** என்ற ஒரு வடையை மோடி சுட்டார். உலகின் பல்வேறு நாடுகளில் இருக்கும் நிறுவனங் களும், இந்தியாவில் தங்கள் உற்பத்தியைத் தொடங்குவார்கள் என்று சொன்னார். நிலைமையோ தலைகீழாக உள்ளது. இதுவரை உலகின் பல நாடுகளுக்கு ஆயத்த ஆடைகளை ஏற்றுமதி செய்த திருப்பூர் உள்ளிட்ட நகரங்கள் மோடியின் தவறான பொருளாதாரக் கொள்கைகளால் இருளில் மூழ்கும் நிலையும், மிகச்சிறிய நாடான வங்கதேசம் ஆயத்த ஆடைஏற்றுமதியில் முன்னணி நாடாகவும் உருவாகியுள்ளது.

**கருப்புப் பண மீட்பு வடை :**

நான் ஆட்சிக்கு வந்தால் வெளிநாடுகளில் இந்தியர்கள் பதுக்கி வைத்திருக்கும் கருப்புப் பணத்தை மீட்பேன். அப்படி மீட்கப்படும் கருப்புப் பணத்தை இந்தியர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தால் ஒவ்வொருவர் வங்கிக் கணக்கிலும் ரூபாய் 15 லட்சம் கிடைக்கும் என்று ஒரு இமாலய வடையைச் சுட்டார் மோடி. அதைத் தன் தேர்தல் அறிக்கையிலும் சொன்னார்.

பா.ஜ.க-வின் 2014ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தல் அறிக்கையில், பக்கம் 5 ல் அவர்கள் கொடுத்த வாக்குறுதியில் கருப்புப்




பணமதிப்பிழப்பின்போது வங்கிகளின் வாசலில் காத்திருந்த மக்கள்

பணம் அனைத்தும் மீட்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதே. ஆனால், இதுவரை இல்லாத அளவிற்கு மோடி ஆட்சிக்கு வந்த பின் தான் சுவிஸ் வங்கிகளில் இந்தியர்களின் நிதி பல்லாயிரம்கோடிஅதிகமாகக்குவிந்துள்ளது என்ற புள்ளி விவரங்கள் அனைத்து ஊடகங்களிலும் வெளியாகின.

**விஜய் மல்லையா தொடங்கி, நீரவ் மோடி, லலித் மோடி, என்று இந்திய வங்கிகளில் பல்லாயிரம் கோடிமக்கள் வரிப்பணத்தை ஏப்பம் விட்டு ஏமாற்றியவர்கள் வெளிநாடுகளுக்கு மோடியின் ஆட்சியில் பாதுகாப்பாக தப்பிச் சென்றனர். அவர்களை இந்தியாவிற்கு அழைத்து வருவேன் வருவேன் என்று மோடி சுடும் வடைகளை இனியும் நம்புவதற்கு வட இந்தியர்கள் கூட தயாராக இல்லை.**

“கருப்புப் பணத்தை ஒழிக்கிறேன் பேர்வழி” என்ற பெயரில் சொல்லாமல் கொள்ளாமல் 500 ரூபாய் , 1000 ரூபாய் நோட்டுகளை இரவோடு இரவாக செல்லாது என்று மோடி அறிவித்தபோது மோடியின் அடிவருடிகள் புல்லரித்துப் போய் கரவொலி எழுப்பினார்கள்.

ஆனால், பொருளாதரத்தை நன்கு தெரிந்த அறிஞர்களோ மோடியின் இந்த நடவடிக்கையை பொருளாதார அறிவுக்கு ஒவ்வாத செயல் என்று கடுமையாக விமர்சித்ததோடு, இதனால் இந்தியப் பொருளாதாரம் பல ஆண்டுகள் பின்னோக்கிச் செல்லும் என்றனர். அவர்கள் சொன்னது போலவே ஆயிற்று.

செல்லாது என்று அறிவித்த 500, 1000 ரூபாய் நோட்டுகளில் பல லட்சம் கோடிகள் ரிசர்வ் வங்கிக்கு திரும்பாது, அவ்வாறு திரும்பாத பணமெல்லாம் கருப்புப் பணம். அவ்வாறு பல லட்சம் கோடி பணத்தை வைத்திருப்பவர்களுக்கு அது வெறும் வெற்றுக் காகிதம். இதன் மூலம் கருபபுப் பணம் ஒழிந்து விடும் என்றுசினிமாவைப் போல் திரைக்கதை எழுதி ரசித்த மோடி கூட்டம் 99 சதவிகித பணம் ரிசர்வ் வங்கிக்குத் திரும்பி வந்த செய்தி வந்த போது , அவர்களின் வடைக் கடையை மூடிவிட்டு ஓட்டம் எடுத்தனர்.



சிக்னல் கோளாறால் ஏற்பட்ட ஒடிசா ரயில் விபத்து (280-க்கும் மேற்பட்டோர் பலி)

ஆனால், மோடியின் இந்த முன்யோசனை இல்லாத செயலால் சாமானிய மக்கள் வங்கிகளின் வாசலிலும், ஏடிஎம் வாசல்களிலும் நீண்ட வரிசையில் காத்துக் கிடந்தனர். பலர் மாண்டு போயினர். இந்தியாவின் இருண்ட காலம் என்றே அதைச் சொல்லலாம். நாட்டில் என்ன நடக்கிறது என்று புரியாமல் மக்கள் பெரும் குழப்பத்தில் தள்ளப்பட்டனர். ஆனால், இது எது குறித்தும் கவலை இல்லாத மோடி, 50 நாட்கள் அவகசாம் கேட்டார். ஆண்டுகள் பல ஓடிவிட்டன. மோடியின் கருப்புப் பண ஒழிப்பு வடையும் ஊசி துர்நாற்றம் வீசிக் கொண்டிருக்கிறது.

**புல்லட் ரயில், நதிகள் இணைப்பு, ஸ்மார்ட் சிட்டி, தூய்மை இந்தியா , டிஜிட்டல் இந்தியா, என்று மோடி சுடாத வடைகளே இல்லை எனலாம். “மோடி ஆட்சிக்கு வந்தால்இந்தியாவில் புல்லட் ரயில் ஓடும்” என்று சொன்னார்கள். ஆனால்,ரயில்களின் ஓடுபாதைகளையும், சிக்னல்களையும் கூட ஒழுங்காகப் பராமரிக்காததால் ரயில் விபத்துகளும் அதனால் உயிரிழப்புகளும் அதிகரித்ததே மிச்சம்.**

**‘தூய்மை இந்தியா’ என்றார்கள். கங்கை நதியைச் சுத்தப்படுத்தி மேம்படுத்த 20,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு என்றார்கள். நிலைமை என்ன தெரியுமா? கடந்த வாரம் தேசிய பசுமைத் தீர்ப்பாயம் ‘கங்கையில் குளிக்கவே கூடாது’ என்று எச்சரிக்கும் அளவிற்கு கங்கை மாசுபட்டுள்ளது.**



மாசுபட்ட நிலையில் உள்ள கங்கை நதி

மோடி ஆட்சிக்கு வந்தால் இந்தியாவின் அண்டை நாடுகள், பகை நாடுகள் எல்லாம் அஞ்சி நடுங்கும் என்றார்கள். சீனா இந்திய எல்லைக்குள் ஊடுருவி ஒரு கிராமத்தையே நிர்மாணித்துவிட்டது.

மோடி ஆட்சிக்கு வந்தால் டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு உயர்ந்து 40 ரூபாயைத் தொடும் என்றனர். இன்று இந்தியரூபாயின்மதிப்புபெரும்வீழ்ச்சியடைந்து டாலருக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பு 82 ரூபாயைத் தாண்டிச் சென்று கொண்டிருக்கிறது.

பட்டினித் தரவரிசைப் பட்டியலில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்கதேசம், ஆப்கன் போன்ற நாடுகளை விட மோசமாக உள்ளது. இப்படி மோடியின் 10 ஆண்டுகால ஆட்சியில் இந்தியாவில் வளர்ந்திருப்பது பா.ஜ.க. வின் சொத்து மதிப்பும், மோடியின் கார்ப்பரேட் நண்பர்கள் சிலரின் சொத்து மதிப்புமே தவிர சாமானிய இந்தியர்கள் இல்லை என்பதே மறுக்க இயலாத உண்மை.

**இதோ தேர்தல் வந்து விட்டது. மோடி தன் வடைச் சட்டியைத் தூக்கிக் கொண்டு மக்களிடம் வருவார். ஆனால் ஏற்கனவே மோடியின் ஊசிப் போன வடைகளால் உடல் உபாதைகளுக்கு ஆளாகியிருக்கும் நாம் இம்முறை மோடியின் வடைகளை குப்பைத் தொட்டிகளுக்கு அனுப்புவோம்.**




இந்தியா கூட்டணி தலைவர்கள்

பாசிச பா.ஜ.க.-வின் ஆட்சியை வீட்டிற்கு அனுப்புவோம். சமச்சீரான, சமூக நீதியை உள்ளடக்கிய வளர்ச்சி இந்தியா முழுமைக்கும் கிடைக்க இந்தியா கூட்டணியை ஆதரிப்போம்.!

**(தொடரும்...)**



அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியம், செந்துறை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற விலையில்லா வீட்டு மனைப் பட்டா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடனுதவிக்கான ஆணையினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் ஆகியோர் உள்ளனர்.




விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி நகர தி.மு.க. சார்பில் கூட்ரோட்டில்நடைபெற்ற தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் மு. க. ஸ்டாலின் அவர்களின் 71வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு ஆயிரம் நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன்,நகர செயலாளர் கார்த்திக் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.